**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) - 2022**

---

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - கூறு 02 (மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்) இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 5788–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் 01 ஆம் பட்டியலின் 4.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் திருத்திய நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு திருத்தப்பட்ட கூறு 02 இற்கான நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அனைத்து மாகாணங்களிலும் உள்ள மாகாண வீதி அதிகாரசபைகள் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சொத்து முகாமை தொடர்பான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை பலப்படுத்துதல் மற்றும் மாகாண வீதிகளிற்கான நுழைவு மற்றும் முகாமைத்துவ கட்டமைப்பை முன்னேற்றுதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 21,875 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் தொகையாகும். செயற்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் கூறு – 02 இன் திருத்திய மாதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,075 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109 மில்லியனாகும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 மே 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் 756 மற்றும் 757 | | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பொருள் மெய்மையாய்வு நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 திசெம்பர் 19 ஆம் திகதிய பிஎஸ்/எஸ்பி/எஸ்பீ/ சுற்றறிக்கை/06/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) | மாகாண செயற்திட்டங்களின் அமுல்படுத்தல் அலகுகள் மற்றும் மாகாண செயற்திட்ட ஆலோசனை சேவை அலகுகளின் பதவியணியினரிற்கு 2019 மார்ச் 30 ஆம் திகதிய டிஎம்எஸ்/டி/7777/ரீசீஏஎம்பி ஆம் இலக்க கடிதம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக மாகாண செயற்திட்ட ஆலோசனை சேவை அலகுகளில் 07 பதவிகளுக்கான ஒப்பந்தத்திற்கு முரண்களின் கீழ் ரூபா 30 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் குறித்த செயற்திட்டத்திற்கு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பதவியணியினரை அங்கீகரித்திருந்தது. எனினும், அத்தகைய செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அதிக எண்ணிக்கையிலான ஊழியர்கள் தேவைப்படுவதால், இந்த ஊழியர்களின் சேவை பெறப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | | (ii) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி இரத்மலானை சிறப்பு மையத்தின் முகாமைத்துவ உதவியாளருக்கு WP 03 ஒப்பந்தப் பொதியின் முரண்களின் கீழ் ரூபா 405,150 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கும் வரை முகாமைத்துவ உதவியாளர் அலுவலக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | பெறுகை வழிகாட்டல்கள் (2006) | | | |
| (i) | 4.4 ஆம் பந்தி | • இரத்மலானை பயிற்சி நிறுவகத்தில் கொடுப்பனவு வடிவமைப்பு ஆலோசகர் மற்றும் சொத்து முகாமைத்துவ ஆலோசகர் பதவிகளுக்கு நேரடி முறையில் ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் வெளிப்படைத்தன்மையின்றி விருப்பத்தின் பேரில் ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆலோசகர் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார், மேலும் பெறுகைக் குழுவிடம் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து, குறித்த உத்தியோகத்தருடன் தொடர்புடைய தரப்பினர் பெறுகை குழுவிலிருந்து விலகியிருந்தனர். | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| | | • இரத்மலானை பயிற்சி நிறுவனத்துக்கான பொருட்களை விபரக்குறிப்புகளுக்கு இணங்க குறைந்தபட்ச கணிசமான விலைமனுவைச் சமர்ப்பித்த நிறுவனத்திடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணமாக ரூபா 912,545 நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது. | உலக வங்கி பெறுகை விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ii) | 8.13.1 ஆம் பந்தி | செயற்திட்டப் பணிகளின் வடிவம், தரம் மற்றும் அளவு ஆகியவற்றை மாற்றுவதற்கு ஒப்பந்த முரண்களைப் பயன்படுத்துவதற்கு தொழில்தருநரிற்கு அதிகாரம் அளிக்கப்படும் சூழ்நிலைகளில் பதவியணியினருக்கான கொடுப்பனவுகள், செயற்திட்ட பணிப்பாளர் மற்றும் பிரதி செயற்திட்ட பணிப்பாளர் உள்ளிட்ட பதவியணியினருக்கு வாகனங்களை வழங்குதல் போன்ற மேலதிக செலவினங்களை மேற்கொள்வதற்காக 2022 | செயற்திட்டப் பணிகளுக்கான கேள்விகளை கோருதல் தோல்வியடைந்ததால், உலக வங்கிக்குத் தெரிவித்து ஒப்பந்தப் பொதிகள் ஊடாக வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்படுதல். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செப்தெம்பர் 30 வரை 25 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 203 மில்லியன் தொகை மொத்த நிகழத்தக்க ஏற்பாட்டின் ஒப்பந்த முரண்களாகச் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 8.13.4 ஆம் பந்தி | நிகழத்தக்க ஏற்பாட்டை விஞ்சும் போது, அதிகார மட்டத்திற்கேற்ப அங்கீகாரத்திற்காக ஒப்பந்த முரண் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2022 செப்தெம்பர் 30 அளவில் ரூபா 229 மில்லியன் தொகை பொதிகளின் நிகழத்தக்க ஏற்பாட்டை விஞ்சி செலுத்தப்பட்டிருந்தது. | வரம்புகளை விஞ்சி கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரிடம் அடிக்கடி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் சிரமமாக உள்ளது. எனினும், ஒப்பந்தத் தொகையை விஞ்சும் சந்தர்ப்பங்களில் உரிய அங்கீகாரம் பெறப்படும். | -மேற்படி- |
| (உ) | இலங்கை ஆலோசகர்களின் தெரிவு மற்றும் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டல்கள் (2007 ஆகஸ்ட்) | | | |
| (i) | 2.5 ஆம் பந்தி | பெறப்பட்ட அனைத்து தொழில்நுட்ப முன்மொழிவுகளும் அதன் தலைவரைத் தவிர ஆலோசனை பெறுகைக் குழுவின் அனைத்து உறுப்பினர்களாலும் சுயாதீனமாக மதிப்பீடு செய்யப்பட்டு முன்னர் தயாரிக்கப்பட்ட பணித்தாள்களில் குறிக்கப்பட வேண்டும். உறுப்பினர்களால் சுயாதீன மதிப்பீட்டை பூர்த்தி செய்த பின்னர் மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட முரண்பாடுகள் பெறுகைக் குழுவின் தலைவரால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, அனைத்து உறுப்பினர்களுடனும் கூட்டாக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு, அந்த | தகைமைகள் மற்றும் அனுபவத்தை மேலும் சரிபார்ப்பதற்கு உபகுழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. | ஆலோசகர்களை தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முரண்பாடுகளைக் குறைப்பதற்கு பொதுவான இணக்கப்பாட்டை அடைந்துகொள்ள வேண்டும்.<br><br>எனினும், அவ்வாறு தொடராமல், நேர்முகப்பரீட்சைக் குழு நடாத்திய நேர்முகப்பரீட்சையொான்றின் மூலம் ஆலோசகர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். | | |
| (ii) | 2.6.2 ஆம் பந்தி | இரத்மலானை பயிற்சி நிலையத்திற்கு பயிற்றுவிப்பாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் போது அமைச்சின் பெறுகைக் குழு முறையாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை நிறுவனத்திற்கு ஏற்றவாறு பெறுகைக் குழுவின் அமைப்பு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தகைமைகள் மற்றும் அனுபவத்தை மேலும் சரிபார்ப்பதற்கு உபகுழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஊ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 1/2019 ஆம் இலக்கத்தை கொண்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் | தேசிய செயற்பாட்டுக் குழுக் கூட்டங்கள் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட செயற்பாட்டுக் குழுக்கள் முறையாக நடாத்தப்பட வேண்டும். |
| (எ) | 2019 சனவரி 12 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்கத்தை கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை | ஆண்டின் போது நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் மூன்று கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | பதில்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு முறையாக நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 26 ஒப்பந்தப் பொதிகளில் தற்போது அமுல்ப்படுத்தப்பட்ட 18 ஒப்பந்தங்களின் ஒப்பந்த காலம் 162 முதல் 597 நாட்கள் வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 75 சதவீத முன்னேற்றம் அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மறுசீரமைப்பு ஆவணத்தில் உள்ளடங்கிய இணங்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் கட்டம் 1 மற்றும் நிலை I மற்றும் நிலை 11 இன் 18 ஒப்பந்தப் பொதிகளில் 17 தாமதத்துடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த பொதிகளின் நிர்மாணம் பட்டியலிடப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்ததாரர்கள் வழங்கும் விலை அதிகமாக இருந்தமை, சனாதிபதி தேர்தல் மற்றும் உத்தியோகத்தர்களின் இடமாற்றம் போன்ற பிரச்னைகளால், ஒப்பந்தங்களை பட்டியலிடப்பட்ட திகதியில் வழங்க முடியவில்லை. | -மேற்படி- |

### 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 30 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் டிஎம்எஸ்/டி/7777/ரீசீஏஎம்பி ஆம் இலக்க கடிதம் மூலம் மாகாண செயற்திட்ட அமுல்ப்படுத்தல் அலகுகள் மற்றும் மாகாண செயற்திட்ட ஆலோசனை சேவை பிரிவுகளின் பதவியணியினர் தொடர்பாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு முரணாக, ஒப்பந்த விலைப்பட்டியல்களின் BOQ இல் உள்ள உருப்படியொன்றின் கீழ் 05 பதவிகள் தொடர்பாக ரூபா 80 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வரையறுக்கப்பட்ட பதவியணியினரை பணிக்கமர்த்துவதற்கு அங்கீகாரம் அளித்துள்ளது, எனினும் அத்தகைய செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு அதிக எண்ணிக்கையிலான ஊழியர்கள் தேவைப்பட்டனர். அதன் பிரகாரம் அந்த ஊழியர்களின் சேவை பெறப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதம வதிவிடப் பொறியியலாளர், வதிவிடப் பொறியியலாளர் மற்றும் உதவி வதிவிடப் பொறியியலாளர் ஆகியோருக்கு வாகனங்களை வழங்குவதற்கான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் இணங்கப்பட்ட பெறுமதியை (BOQ) விஞ்சி, NWP 03 பொதியின் 15 (IPC) ஆம் இலக்க விலைப்பட்டியலில் ஒப்பந்த உடன்படிக்கையின் 20.1 ஆம் பிரிவின் கீழ் உரித்தானதாக ஒப்பந்தத்தின் தொடக்கத்தில் | உடன்படிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரரின் கோரிக்கை தொடர்பாக பரிசீலிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தொடர்புடைய உரித்தை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து 2022 மார்ச் 31 வரையிலான மொத்தக் காலப்பகுதிக்காக ரூபா 2 மில்லியன் தொகை திருத்தப்பட்ட பெறுமதியின் பிரகாரம் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | இரத்மலானை பயிற்சி நிலையத்தின் ஆலோசகர்களைத் தெரிவு செய்யும் போது விண்ணப்பதாரர்களின் விலை முன்மொழிவுகளிலும், பெறுகை விளம்பரத்திலும் வாகன வசதிகளை வழங்குதல் அல்லது வாகனங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான எந்தவொரு குறிப்பும் உள்ளடக்கப்பட்டிருக்காத போதிலும் வாகனம் வழங்கப்படுவதற்கான நிபந்தனை உரிய உடன்படிக்கைகள் சேர்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், வடமேல் மாகாண சபையின் வீதி ஒப்பந்ததாரர்கள் ஊடாக அவர்களுக்கு வாகனங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | முன்மொழிவுகளுக்கான கோரிக்கையில் இது சேர்க்கப்படாத போதிலும் 20 ஆண்டுகளுக்கும் மேலாக தொடரப்பட்ட நடைமுறைக்கு இணங்க தேவையான வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இரத்மலானை பயிற்சி நிலையத்தின் சொத்து முகாமைத்துவ ஆலோசகருக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஆலோசகர் உடன்படிக்கையின் பிரகாரம் சேவையை நிறுத்தியிருக்காததுடன் அந்தக் காலப்பகுதியில் ஆற்றப்பட வேண்டிய கடமைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் சேவைக் காலத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>ஏற்கனவே நிறுவப்பட்டிருக்க வேண்டிய சொத்து முகாமைத்துவ பிரிவு இதுவரை நிறுவப்பட்டிருக்காததால் மேற்படி ஆலோசகருக்கு செலுத்தப்பட்ட ரூபா 3 மில்லியன் சம்பளம் பயனற்ற செலவினமாக இருந்தது. | நாட்டில் நிலவும் நிலைமை காரணமாக எதிர்பார்த்த முன்னேற்றத்தை அடைந்துகொள்வதில் தாமதம் ஏற்பட்டதுடன் வேறு ஒரு பிரிவு நிறுவப்படாத போதிலும் வீதி சொத்து முகாமைத்துவத்திற்கு தேவையான தரவு சேகரிப்பு ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.3 கள விஜயங்களின் போது மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

**(அ) மத்திய மாகாணம் - கொடமுன்னகித்துல்பே வீதி**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ஒப்பந்த உடன்படிக்கையின் 8.3 நிபந்தனையின் பிரகாரம் ஒப்பந்தம் பணித் திட்டத்திலிருந்து விலகும் சந்தர்ப்பங்களில், ஒப்பந்ததாரரால் திருத்தப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு, ஆலோசகர் பொறியியலாளரால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய திருத்தப்பட்ட பணி நிகழ்ச்சித்திட்டத்தை அங்கீகரிப்பதற்கு எந்த | ஒப்பந்ததாரரின் கோரிக்கையை பரிசீலித்த பின்னர் ஒப்பந்த காலம் 2022 யூன் 22 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட வேலை நிகழச்சித்திட்டம் ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்டதுடன் ஆலோசகர் பொறியியலாளரால் | வேலைத் திட்டத்தின் பிரகாரம் பணியாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்டது. ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதில் ஏற்படும் தாமதங்களிற்காக கட்டணம் அறவிடப்படும் என ஒப்பந்ததாரருக்கு எழுத்துபூர்வமாக தெரிவிக்கப்பட்டது. | |
| (ii) | அஸ்பால்ற் கலவை பகுப்பாய்வு சோதனை தோல்வியடைந்த போதிலும், BOQ இல் உருப்படி இல. 506 (1) ஆ இன் கீழ் 16160m2 பரப்பளவில் 50 மிமீ தடிமன் கொண்ட அஸ்பால்ற் கொங்கிறீட்டிற்கு ரூபா 5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | கலவையில் மிகக் குறைந்த அளவு பாறைத் துகள்கள் இருப்பது அதன் தரத்திற்கு தீங்கு விளைவிக்காததுடன் இது மேற்பரப்பின் சறுக்கல் எதிர்ப்பை சற்று அதிகரிக்க உதவுகிறது. வாகனப் போக்குவரத்தின் போது மேற்பரப்பின் சறுக்கல் எதிர்ப்பால் பாதுகாப்பு மேம்படுத்தப்படுகிறது. | பரிந்துரைக்கப்பட்டவாறு தரமான மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரால் தர சோதனை ஆய்வுகூடம் பராமரிக்கப்பட வேண்டும். மேலும் ஆய்வுகூட உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் ஆலோசகர் பொறியியலாளரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட வேண்டியதுடன் உபகரணங்களின் அளவுத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். எனினும், அத்தகைய அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததுடன் கொங்கிறீட் இறுக்க சோதனை இயந்திரம் மற்றும் CBR இயந்திரத்திற்கான அளவுத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆய்வுகூடம் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்கான அங்கீகாரம் வதிவிடப் பொறியியலாளரால் வழங்கப்பட்டது. கொங்கிறீட் இறுக்க சோதனை இயந்திரம் மற்றும் CBR இயந்திரங்களுக்கான அளவுத்திருத்தம் RE அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்ட ஒரு சோதனை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டது. கொடுப்பனவில் தாமதம் காரணமாக அளவுத்திருத்த அறிக்கைகள் ஒப்பந்ததாரரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்ததாரர் அறிக்கையைப் பெற்றவுடன் RE அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பார். | தரக்கட்டுப்பாட்டு முறை அதிகாரிகளால் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (iv) | ஓரங்களின் நிர்மாணத்தின் பின்னர் ABC மற்றும் அஸ்பால்ற் இடுதல் தொடங்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் ஓரங்களின் நிர்மாணத்திற்கு முன்னரே 646 மீற்றருக்கு ABC ஐ இடுதல் மற்றும் 770 மீற்றருக்கு அஸ்பால்ற் இடும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | இலங்கையில் நடைமுறையில், குறுகிய வீதிகளில் ABC ஐ இட்ட பின்னர் ஓரங்களை நிர்மாணிக்கும் ஒரு வழியாகும். மேலும் இன்னொன்று ஓரங்களின் நிர்மாணம் ABC ஐ பயன்படுத்துவதற்கு முன்பு செய்யப்படுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் பரிந்துரைக்கப்பட்ட வீதியின் அகலத்தை விட இருபுறமும் சுமார் 250 மிமீ அதிக ABC | நிலையான முறைகளின் பிரகாரம் பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இடப்படும். மேலும் மேலதிக ABC இற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படாது. இது பக்கவாட்டு ஆதரவைப் பயன்படுத்துவதன் மூலம் வீதியின் ABC/ அஸ்பால்ற்றை உறுதிப்படுத்துகிறது. இது ABC/ அஸ்பால்ற்றின் தரத்திற்கு எந்த நேரடி சேதத்தையும் ஏற்படுத்துவதில்லை. | |
| (v) | விளிம்பு அகலப்படுத்தும் வேலையில் உப அடிப்படை வகை 01 இற்கு ABC மாற்றப்பட்டிருந்தது. எனவே விளிம்பு அகலப்படுத்தும் பணியில் ஒப்பந்ததாரருக்கு ரூபா 696,018 மேலதிக தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றாடல் பாதிப்பில் மண்ணுக்குப் பதிலாக ABD ஐப் பயன்படுத்துவதற்கு செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. | BOQ இன் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**(ஆ) வடமேல் மாகாணம் - NWP 01/02/03**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் தெரிவு செய்யப்பட்டிருந்த இந்த பொதியில் உள்ள 12 வீதிகளில் 04 வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வீதிகளைத் தெரிவு செய்வதற்கு சாத்தியவள ஆய்வுடன் கூடிய சரியான முறை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அரசியல் அதிகாரத்தினால் கோரப்பட்டவாறு ஏனைய 08 வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வீதிகளை பராமரிப்பதற்காக ரூபா 33.1 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. | 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான பராமரிப்புச் செலவினங்கள், 2022 மார்ச் 29 ஆம் திகதிய பிஆர்டிஏ/1/3/17/22 ஆம் இலக்க மாகாண பணிப்பாளரின் கடிதத்தில் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது. | அபிவிருத்தி செய்வதற்கான வீதிகளைத் தெரிவுசெய்வதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | **புஹுரிய – பொல்கஹவெல வீதி** ஒவ்வொன்றும் ரூபா 75000 மதிப்பீட்டின் பிரகாரம் கால்வாய்களை தூர்வார்வதற்காக மதிப்பிடப்பட்டிருந்தது. அங்கே 22 மதகுகள் இருந்ததுடன் அவற்றில் பல முறையாக தூர்வாரப்பட்டிருக்கவில்லை. எனினும் செலுத்தப்பட்ட ரூபா 1 மில்லியன் தொகை வீண் செலவினம் அல்ல. | 2021 யூலையில் இந்த வீதி தொழில்தருநரால் கையகப்படுத்தப்பட்டது, மேலும் இந்த மதகுகள் அனைத்தும் ஒப்பந்ததாரர்களால் முறையாக சுத்தம் செய்யப்பட்டு சேற்றை அகற்றின. எனினும், அந்த வீதிகளின் பராமரிப்பு 2021 பராமரிப்பு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தக் காலப்பகுதியின் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக, | கொடுக்கப்பட்ட கால எல்லையினுள் நிலையான முறைகளின் பிரகாரமும் BOQ பரிந்துரைத்தவாறும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிதிப் பற்றாக்குறை, வீதியை தெரிவு செய்வதில் முன்னுரிமை இல்லாதமை மற்றும் 2022 இல் நாட்டில் நிலவும் பொருளாதார நிலைமை ஆகியவற்றால் இதுவரை பராமரிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் இந்த வருடத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கான ஏற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்கு முன்னுரிமை வழங்கப்படுவதைக் கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதாக நம்புகின்றேன். | |

**3.4 புறம்பான செயற்பாடுகள்/ செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபைகள் மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களங்களில் அரசாங்க சேவையில் கடமையாற்றும் பொறியியலாளர்கள் அவர்களது தொழில் தகைமைகளை பூர்த்தி செய்வதற்காக இச்செயற்திட்டத்தின் நிதியேற்பாடுகளில் ரூபா 22.2 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை பட்டயப் பொறியியலாளர்கள் சபையின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திறன் மேம்பாட்டிற்காக பெறப்பட்ட நிதியை அர்ப்பணிப்பது செயற்திட்ட நோக்கங்களுடன் பொருந்தாது. | கடன் உடன்படிக்கையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளுக்கு மாத்திரமே ஒதுக்கீட்டைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக போதுமான உள்ளக கணக்காய்வு செயன்முறை மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வு சரியாக செயற்பட வேண்டும். |
| (ஆ) | பயிற்றுவிப்பாளர்களுக்கான பதிவேட்டில் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டு தேவைப்படும்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |